செய்தி வெளியீட்டு எண்: 458 நாள்: 23.11.2021

## பள்ளி பேருந்தினை இயக்கி, பள்ளி பேருந்தின் இயக்க நிலை மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இஆப, அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி மற்றும் உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் சார்பில் நடைபெற்ற பள்ளி பேருந்து ஆய்வு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இஆப, அவர்கள் இன்று (23.11.2021) ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கொரோனா கட்டுப்பாடுகள் தளர்வுகளுக்கு பின்னர், அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் செயல்பட துவங்கியுள்ளன. இப்பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயன்படுத்தப்படும் வாகனங்களின் இயக்க நிலைகள் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து கள்ளக்குறிச்சி மற்றும் உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் சார்பில் இன்று பேருந்து ஆய்வு முகாம் நடைபெற்றது.

அதன்படி, கள்ளக்குறிச்சி தனியார் பள்ளி வளாகத்தில் கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் சார்பில் நடைபெற்ற பள்ளி பேருந்துகள் முகாம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இம்முகாமில் 76 பேருந்துகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. மேலும், பள்ளி மற்றும் கல்லூரி பேருந்துகளில் அவசர கால கதவு, முதலுதவி பெட்டகம், தீயணைப்பு கருவி, பேருந்தின் தரைத்தளம், புவியிடங்காட்டி (GPS), கண்காணிப்பு கேமரா, பிரேக், கட்டுப்பாட்டு கருவி மற்றும் கிளட்ச் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் இயக்கநிலை குறித்து, பேருந்தினை இயக்கி ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

மேலும், பள்ளி மற்றும் கல்லூரி பேருந்து ஓட்டுநர்களுக்கு அவசர காலங்களில் மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறிதது விழிப்புணர்வினை ஏற்படுத்திட வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து, உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் சார்பில் உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்தில் நடைபெற்ற பள்ளி பேருந்து முகாம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இம்முகாமில் 32 பேருந்துகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. மேலும், பள்ளி மற்றும் கல்லூரி பேருந்துகளில் அவசர கால கதவு, முதலுதவி பெட்டகம், தீயணைப்பு கருவி, பேருந்தின் தரைத்தளம், புவியிடங்காட்டி (GPS), கண்காணிப்பு கேமரா, பிரேக், கட்டுப்பாட்டு கருவி மற்றும் கிளட்ச் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் இயக்க நிலை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

பின்னர், தீயணைப்புத்துறையின் சார்பில் பேருந்து விபத்து காலங்களில் பேருந்து ஓட்டுநர்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு செயல்விளக்க பயிற்சி ஓட்டுநர்களுக்கு வழங்கப்பட்டது. ஓட்டுநர்கள், பள்ளி மற்றும் கல்லூரி பேருந்துகளை இயக்கும்போது மிகுந்த கவனத்துடன் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, விழிப்புணர்வுடன் இயக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. ஓட்டுநர்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி வகுப்பு உளுந்தூர்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் சார்பில் நடத்தப்பட்டு, தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டன. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, திருக்கோவிலூர் கோட்டாட்சியர் செல்வி.கி.சாய்வர்தினி, கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ஜெயபாஸ்கரன், உளுந்தூர்பேட்டை வட்டார போக்கவரத்து அலுவலர் திரு.கே.செந்தூர்வேல், கள்ளக்குறிச்சி துணை காவல் கண்காணிப்பாளர் செல்வி.வி.இராஜலட்சுமி, உளுந்தூர்பேட்டை துணை காவல் கண்காணிப்பாளர் திரு.ஆர்.மணிமொழியன், கள்ளக்குறிச்சி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஆர்.செல்வம், உளுந்தூர்பேட்டை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பி.பெரியசாமி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**<u>செய்தி வெளியீடு:</u>**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.